# கலைக்குரிசில்
# அந்தோனி அண்ணாவியார்




# நினைவு மலர்

26-06-1989

WWW.KALAIKURUSIL.COM

நாட்டுக் கூத்துக்கு வாழ்வை அர்ப்பணித்த

# அந்தோனி அண்ணாவியார்



**அருமைசேர் தந்தையே**
**உன்பாதத்தை நமஸ்கரித்தேன்**

*விற்பரிய நாவா நகரில் பிறந்துமே*
*விளங்கு பல நாடகத்தில் — தீரமுடன்*
*நடித்துமே, அண்ணாவியாகி, நீர்*
*சிறந்த பல நாடகத்தை பொற்புற இயற்றியே*
*நடிகர்களைக் கீர்த்தி — மேவு புகழ்மாலை சூடி*
*எங்கள் பொன் நகராம் மெலிஞ்சிமுனை தனில்*
*கலைக்குரிசிலென், புகழ் திரு நாமமே பெற்று*
*பற்பல, இசை நாடகங்களை பாடியே*
*பாலர் எமக்கீந்து, ஐயா பரகதி*
*எய்திட்ட அருமை சேர் தந்தையே*
*உன்பாதத்தை நமஸ்கரித்தேன்*

- அந்தோனி சவிரிமுத்து

பங்குத் தந்தை

# ஆசியுரை

மறைந்த திரு நீ. வ அந்தோனி அண்ணாவி அவர்கள் நாட்டுக் கூத்துத் துறைக்குச் செய்த பணிக்காக காலம் பிந்தி என்றாலும் கௌரவிக்கிற மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

எமது தமிழ்ப் பிரதேசத்தில் பாரம்பரியமாக வளர்ந்து பேணிக்காக்கப்படுகிற கலைகள் அழியாமல் பாது காத்தவர்கள் பெரும் தொண்டாற்றி உள்ளார்கள் என்றே கூற வேண்டும்.

எமது மண்ணின் அனுபவங்களால் எமது கலாச்சாரமும் பாரம்பரிய கலைகளும் அழிந்து விடாமல் பாதுகாப்பதும் மண்ணின் அனுபவங்களோடு, இணைத்து வெளிக் கொணர்வதும் அந்தத் துறையில் உள்ளவர்களின் பணியாகும்.

அன்னார் இதற்கமைய நாட்டுக் கூத்துப் பணிக்கு தன்னால் இயன்றளவு மெருகூட்டும் பணியை சிறப்புற செய்து முடித்து பெரும் தொண்டாற்றியுள்ளார்.

திரு. நீ, வ. அந்தோனி அண்ணாவி அவர்கள் மெலிஞ்சி முனைக் கிராமத்தில் இருந்து தமது முயற்சியால் வளர்ந்து கலைத் துறைக்கு மட்டுமல்லாமல் கிறிஸ்தவ துறைக்கும் பணியாற்றியுள்ளார்,

மெலிஞ்சிமுனைக் கிராமத்தில் நாட்டுக் கூத்துத் துறைக்கு பணி செய்யக் கூடிய பலர் இருப்பதால் அவர்களும் இவரைப் போன்று பணி புரிய முன் வர வேண்டுமென அழைப்பு விடுகிறோம்.

அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை
பங்குத் தந்தை
கரம்பொன்,
ஊர்காவற்றுறை.

## வாழ்த்துரை

'திருமறைக் கலாமன்றம்'
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்.

கலை காலத்தை வென்றது; கலைஞனும் அழிவைக் காணாத அமரன் இவற்கு எடுத்துக்காட்டாக மெலிஞ்சி முனையில் ஊறியிருக்கும் நாட்டுக்கூத்துக் கலையையும், அக்கலையை ஒரு காலகட்டத்தில் வளர்த்த "கலைக்குரிசில்" நீ. வ அந்தோனி அண்ணாவியையும் குறிப்பிடலாம்.

'கலைக் குரிசிலி''ன் கலைப்பணியை நினைவு கூரும் நாம் அவர் வளர்த்த கலையையும் அவர் வழி நின்று கட்டிக்காக்க முனைவது அவருக்கு நாம் செய்யும் பதில் நன்றி.

வாழ்க உமது முயற்சி.

அருள் திரு. நீ. ம. சவரிமுத்து
அடிகள்
(கலைகலாச்சாரப் பிரிவு,
யாழ். மறை வட்டம்)

# வாழ்த்துரை

சி. ஈட்வேட்
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணம்.

ஊர்காவற்றுறையில் மெலிஞ்சி நகர்ப்பகுதியில் அரைநூற்றுண்டுகளுக்கு மேலாக கலைத்துறைக்குச் சேவை செய்து மறைந்தவர்தான் இன்றைய இதழின் நாயகன் அமரர் கலைக்குரிசில் நீ. வ. அந்தோனி அவர்கள்.

இற்றைக்கு 20 ஆண்டுகளுக்கு முன் இவர் மறைந்தபோதும் நாட்டுக்கூத்து என்ற மரபுக்கலை வேரூன்றிய இடங்களில் எல்லாம் அவர் நாமம் நினைவில் நிற்குமென்பது திண்ணம்

இத்தகைய பெரியாரின் நினைவாக அவரால் வளர்த்தெடுக்கப்பட்ட கலைஞர்களும், அவருடைய கிராமமக்களும் நினைவுமலர் வெளியிடுவதனையிட்டு நாமும் மகிழ்ச்சியடைகின்றோம். மரபுக் கலைகள் புறக்கணிக்கப்பட்டும், ஊக்கமின்றி அழிந்தும் வருகின்ற இந்நாட்களில் அத்தகைய கலையை இன்றும் காத்து நிற்கின்றவர்களும் அதற்காக அல்லும் பகலும் பாடுபட்டு மறைந்த அமரர் திரு நீ. வ. அந்தோனி போன்றவர்களும் என்றென்றும் நினைவு கூரப்படவேண்டியவர்களே.

இவரின் இசையுடன் கூடிய நடிப்பினையும் இவரால் மேடையேற்றப்பட்ட நாடகங்கள் பலவற்றையும் பார்த்து ரசிக்கும் வாய்ப்புக்களை யான் பெற்றிருந்தேன். இவர் நாட்டுக்கூத்துக்குப் பங்காற்றிய பெரியார் சொர்ணலிங்கம் போன்றவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர். வர்யாரப் புகழ்ந்து பேசப்பட்டவர். நாட்டுக்கூத்துக்கள் மேடையேறும்போதெல்லாம் இவர்கள் நாமத்தை நினைவு கொள்வது சாலவும் பொருத்தமாகும்.

# யாழ்ப்பாண நாட்டுக்கூத்துப்பற்றிய விரிவான ஆய்வு வேண்டும்!

பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்

கலைக்குரிசில் நீ. வ. அந்தோனி அவர்களுடைய பெயர் ஈழத்து நாட்டுக்கூத்து வரலாற்றிலே இடம்பெறவேண்டியதொன்றாகும். "புனித கிறிஸ்தோப்பர், தாவீது - கொலியாத், புனித தொம்மை யார், புனித செபஸ்தியார் என்னும் கத்தோலிக்க நாட்டுக்கூத்துக் களை எழுதிப் புகழ்பெற்ற அன்னாரைக் கௌரவிக்குமுகமாக, அன் னாரின் நினைவுமலர் வெளியிடப்படவுள்ளது. இவ்வேளையிலே யாழ்ப்பாணத்துத் தென்பாங்கு அல்லது தென்மோடி நாட்டுக்கூத் துப்பற்றியும், கத்தோலிக்க சமயத்தைச்சார்ந்தவர்கள் இக்கூத்து மரபுடன் தொடர்புற்ற தன்மையினையும் நோக்குவது பொருத்த மாகும்.

ஈழத்துத் தமிழர் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் ஒரு முக்கிய பண்பாகத் திகழ்வது நாட்டுக்கூத்தாகும். ஈழத்தமிழருடைய நாட் டுக்கூத்துக்கெனத் தனியானதொரு வரலாறே உண்டு. அவ்வரலாற் றினையும் சுருக்கமாக இச்சந்தர்ப்பத்திலே நோக்குதல் நன்று. மேலைத்தேயக் கலாச்சாரக் கூறுகள் சில நம் பிரதேசத்திலே பரவும் முன்னர், நாடகம் என்றால் நாட்டுக்கூத்தாகவே இருந்தது. இக்கூத்து ஆடல் மரபினையும் பாடல் மரபினையும் தன்னகத்தே கொண்டதாக அமைந்தது. இத்தகைய கூத்துக்கள் யாழ்ப்பாணம், மன்னார், வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்க ளிலே ஆடப்பெற்றன. கிறீஸ்தவசமயம் இங்கு பரவியபொழுது கிறீஸ்தவசமயக் குருமார்கள் தமிழர் பிரதேசங்களிலே மேடை யேற்றப்பட்ட நாட்டுக்கூத்துக்களைப் பார்க்கும் வாய்ப்பு ஏற்பட் டது. பெருந்திரளாக மக்கள் இரவிரவாக இக்கூத்துக்களைப் பார்த்துக் களிப்பதைக்கண்ட அவர்கள் இக்கூத்துக்கள் மூலமா கத் தம்முடைய மத போதனைகளை மக்களிடையே பரப்புதல் இலகு வெனக்கண்டனர். ஆனால் அன்று தமிழ்ப் பிரதேசங்களிலே ஆடப் பட்ட கூத்துக்களின் கதைப்பொருள் இந்துப் புராண இதிகாசக் கதைகளை அடிப்படையாகக் கொண்டமைந்தது. அத்துடன் கூத்துக் கள் ஆடல்மரபினை உடையனவுமாயிருந்தன. கத்தோலிக்க குருமாரு டைய ஊக்கத்தின் பேரில் அச்சமயத்தைச் சார்ந்த பல புலவர் களும் கலைஞர்களும் தென்மோடிப் பாங்கிலே யாழ்ப்பாணத்திற் பல நாட்டுக்கூத்துப் பிரதிகளை எழுதினர். அவர்களுடைய சமய நெறிக்கேற்ப ஆடல்மரபினைக் கைவிட்டு திருமறையுடன் தொடர்

புடைய கதைகளைக் கூத்துக்களுக்குப் பொருளாகக் கொண்டனர். இம்மரபிலே வந்தவர்தான் கலைக்குரிசில் நீ. வ. அந்தோனி அவர்கள்.

திருமறையிலே இடம்பெறும் தாவீது - கோலியாத் கதை ஆசிரியரால் நாட்டுக்கூத்து வடிவம் பெற்றது. புனித தொம்மையார், புனித கிறிஸ்தோப்பர், புனித செபஸ்தியார் ஆகிய இறையடியார்களுடைய வரலாறுகளும் இவ்வாசிரியர் கைவண்ணத்தால் நாட்டுக்கூத்துக்களாயின.

மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் எழுதப்பட்ட கத்தோலிக்க நாட்டுக்கூத்துக்களுட் பெரும்பாலானவை தென்மோடியைச் சேர்ந்தன. யாழ்ப்பாணத்துத் தென்பாங்கு நாட்டுக்கூத்துக்கள் பற்றி எவரேனும் விரிவாக ஆராயவில்லை என்றே கூறலாம். அவற்றின் பண்புகள் பற்றிய விளக்கங்கள் விரைவிலே வெளிவரவேண்டும். மன்னார்த் தென்மோடிக் கூத்துக்களெல்லாம் ஆடற்பண்புடையன. ஆனால் யாழ்ப்பாணத்துத் தென்மோடிக் கூத்துக்களெல்லாம் ஆடற்பண்புடையனவாக இருந்தன என்று கூறமுடியாது. எனினும் ஆடலுக்கு அடிப்படையான தாள லயம் அக்கூத்துக்களிலே உண்டு.

யாழ்ப்பாணத் தென்மோடிக்கூத்துக்களிலே நடிப்பு முக்கியத்துவம் பெற்றது, அத்துடன் பாடல்களுக்கும், இக்கூத்துக்களிலே சிறப்பிடமுண்டு. ஆடற்பண்புடைய தென்மோடிக் கூத்துக்கள் வட்டுக்கோட்டையிலே ஆடப்பட்டு வந்துள்ளன.

யாழ்ப்பாண நாட்டுக்கூத்துப்பற்றி ஆராய்பவர்கள் பின்வரும் விடயங்களைத் தம் கருத்திலே கொள்ளவேண்டும்.

(1) வடமோடி தென்மோடி என்ற பாகுபாடு என்ன அடிப்படையிலே யாழ்ப்பாணக் கூத்துக்களுடன்தொடர்புற்றன?
(2) வடமோடி தென்மோடி என்றால் என்ன? யாழ்ப்பாணக் கூத்துக்களை ஆதாரமாகக்கொண்டு நோக்குதல்.
(3) ஆடற்பண்புடைய கூத்துக்கள் - ஆடற்பண்பற்ற கூத்துகள் என்ற பாகுபாடு என்ன வகையிலே யாழ்ப்பாணக் கூத்துக்களுக்குப் பொருந்தும்.
(4) யாழ்ப்பாணக் கத்தோலிக்க கூத்துகளின் தனித்துவம் என்ன?

யாழ்ப்பாணக் கூத்துக்கள் பற்றி விரிவான ஆய்வு வெளிவரும்போது நாட்டுக்கூத்துக்களை எழுதிய புலவர்களின் திறன்களும் விரிவாகப் பேசப்படும். அப்பொழுது கலைக்குரிசில் நீ. வ. அந்தோனி அவர்களுடைய பெயரும் விளக்கம் பெறும். தமிழ்க் கலைஞன் ஒருவனைத் தமிழ் மக்கள் மறக்கவில்லை என்பதற்கு இம் மலர் சாட்சியாக அமைகின்றது.

கரம்பொனூரிலே

# ஒரு நாட்டுக்கூத்துக் காவலன்

எஸ். எம். யோசெப்
அதிபர், மெலிஞ்சிமுனை,
றோ. க. வித்தியாலயம்.

*ஒரு நூற்றுண்டுக்கு மேலாக கரம்பொன் ஊரிலே தமிழரின் பண்டைய நாடகக் கலைகளில் ஒன்ருன தென்மோடி நாட்டுக் கூத்தை அழியவிடாது பாது காத்து வரும் பெருமைக் குரியவர் கள் இன்று மெலிஞ்சிமுனையில் தனித்தொரு குடியேற்றக் கிராம மாய் வளர்ந்து வரும் மீனவ சமுதாயமக்களே என்ருல் மிகையா காது. ஊசோன் பாலந்தை என்னும் பெயர் பெற்ற நாடகத்தை கரம்பொனிலே மேடையேற்றி நடித்தவர்களின் வழித்தோன்றல் கள் இன்றும் நாட்டுக்கூத்தை விடாது நடித்து, வருடா வருடம் நாடகங்களை மேடையேற்றி அரங்கேற்றிவருவதை நாம் அறி வோம்; நாடறியும்.*

*இந்த நாட்டுக்கூத்துக் கலையை கால்நூற்ருண்டுக்கு மேலாக வளர்த்துப் பாதுகாத்த பெருமை காலஞ்சென்ற அண்ணவியார் நீ. வ அந்தோனி அவர்களுக்கு உரியது என்ருல் அது வெறும் பேச்சல்ல. அவர் நாட்டுக் கூத்திலே நன்கு தோய்ந்து ஊறிப் போன கலைஞர். நாடகங்கள் பல வற்றை எழுதியதோடு, நெறிப் படுத்தி மேடையேற்றி வெற்றி கண்டவர். பழைய நாட்டுக்கூத்து நாடகங்களை புதுக்கி எழுதியும், பல புதியநாடகங்களைத் தாமே ஆக்கியும் மேடையேற்றிஞர், நாவாந்துறை, கரையூர், பாஷையூர் முதலிய இடங்களில் உள்ள புகழ்பெற்ற நாட்டுக்கூத்துக் கலைஞர் களுடன் ஈடுகொடுத்து நிற்கத்தக்க ஆற்றல் மிக்கவராயிருந்தார். பெரும் கல்விமாஞே பண்டிதஞே அல்லாவிடினும் அனுபவத்தால் பெற்ற அறிவைக்கொண்டு பாடல்கள் எழுதுவதில் கைதேர்ந்து விளங்கிஞர்.*

*மெலிஞ்சிமுனையின் இன்றைய நாட்டுக்கூத்துக் கலைஞர்கள் நடிகர்கள் எல்லோருமே அண்ணவியார் அந்தோனியின் வழித் தோன்றல்கள் — அவரால் வழி நடத்தப்பட்டவர்கள்.*

*முதியோர் முதல் இளம் சிருர்வரை மெலிஞ்சிமுனை மக்கள் அனைவருமே நாட்டுக் கூத்துப் பிரியர்கள். அவர்களது இரத்தத்தில்*

ஊறிய அருங்கலை நாட்டுக்கூத்து. வாழ்க்கையோடு இரண்டறக் கலந்த இந்த அருங்கலைக்கு முன்னோடியாயிருந்து பேச்சிலும் மூச்சிலும் அக்கலைக்காகவே வாழ்ந்த ஒரு கலைஞனை நினைவுகூர அவரது பதினேழாவது சிரார்த்ததினத்தை முன்னிட்டு இளம் கலைஞர்கள் நன்றிப்பெருக்கோடு ஒரு நினைவுமலரை அவரது நினைவாக வெளியிடுவது பெருமைக்குரியது. இந்த நினைவுமலர் அவர்புகழை அழியவிடாதுகாக்க எடுக்கப்படும் அரும்பணி என்று கூறுதல் பொருந்தும்.

கடந்த 35 ஆண்டுகளாக எனக்கு மெலிஞ்சிமுனைமக்களோடு நெருங்கிய ஈடுபாடு உண்டு, கலைஞர் அந்தோனி அவர்களை நன்கு அறிந்தவன் என்ற முறையிலும், அவரது நாடகங்கள் பலவற்றையைப் பார்த்து இரசித்தவன் என்ற நிலையிலும். மறைந்த இந்த சகாப்த மனிதனை நினைவுகூரும் மெலிஞ்சிமுனை மக்கள் முயற்சிக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றேன். கால வெள்ளத்தால் அண்ணவியார் அந்தோனியின் புகழ் - பெருமை அழியாதிருக்க இம்மலர் உதவும் என்பது எனது நம்பிக்கை.

**

# அந்தோனி அண்ணாவியார்
# தென்மோடி நாட்டுக் கூத்தின் வழிகாட்டி

எஸ். விமலதாசன் நோர்வே

நீண்ட காலமாக மனக் கிடக்கையில் ஆதங்கங்களோடு உழன்று கொண்டிருந்த இந்த சகாப்த மனிதனைப் பற்றிய கனவுகள் இன்று அலைகளையும் விலக்கி கரு முகில்களுக்குள் புரட்டப் படாமல் புதைந்து கிடந்த அத்தியாயங்களையும் சுமந்தபடி மலர்ந்து வருவது ஆயிரமாயிரம் சிறகுகள் முளைத்து வானத்தில் பறப்பது போல் ஓர் உணர்வை ஏற்படுத்துகிறது.

உலகில் பல திசைகளிலும் சிதறி வாழும் எம் தமிழ் மக்களுக்கு அறிமுகப் படுத்தாமலேயே மாபெரும் கலைஞன் ஒருவனை மண்ணுக்குள் புதைத்து விட்டோமே என்ற குற்றஉணர்வுக்கு இன்று தான் நாம் பதிலிறுக்க முன்வந்துள்ளோம். ஆனாலும் செய்து முடிக்கப்படாத எமது கடமை ஒன்றை காலம் தாழ்த்தியாவது செய்கிறோமே என்பது மனதுக்கு சற்று ஆறுதலைக் கொடுக்கின்றது.

ஈழதேச பாரம்பரிய கலைகளில் தென்மோடி, வடமோடி நாட்டுக்கூத்துக்கள் பிரதானமானவை. தென்மோடி வடபகுதி மக்களால், அதுவும் கரையோரப்பகுதி மக்களால் பாடி நடிக்கப்பட்டு வந்தது. தென்மோடி கருத்தாழம், கனமுள்ள கவிதைகளை உள்ளடக்கிய பாடல்களையும், நடிப்பையும் முக்கியமாகக் கொண்டு மேடையேற்றப்படுகிறது. ஆனால் வடமோடி நாட்டுக்கூத்து இதிலிருந்து சற்று வேறுபட்டது. ராக சந்தங்களால் மட்டுமல்லாது தாள, லய, அசைவுகளையும் உள்ளடக்கியதாகும். மொத்தத்தில் இலங்கையில் தமிழ்பேசும் மக்களின் கலையுலகில் தென்மோடி, வடமோடி நாட்டுக்கூத்துக்கள் இருவிழியாகவே இருந்து வந்தன என்லாம்.

ஆலவிருட்சமாய் புடையெங்கும் கிளைகள் பரப்பி ஆயிரமாயிரம் விழுதுகள் மண்ணில் ஊன்றி நிமிர்ந்து நின்ற பாரம்பரியக் கலைகளான நாட்டுக்கூத்துக்கள் நவீன தொடர்புச் சாதனங்களின் வருகையால் இன்னும் செழுமையோடு பாரிய வளர்ச்சி எய்தியிருக்கவேண்டும். ஆனால் அதற்கு முற்றிலும் மாறாகவே, பின்தள்ளப்படும்நிலை இருக்கிறது.

உயிருக்கு ஊசலாடிக்கொண்டிருக்கும் நாட்டுக்கூத்துக்கலை எங்கே இறந்துபோய் மறைந்து விடுமோ என்ற ஆதங்கம் கலைஞர்களையும், கலை இலக்கிய ஆய்வாளரையும் கரையோரம் வாழ் தமிழ் மக்களையும் ஆட்கொண்டிருந்தது.

அதேசமயம் நமது நாட்டுச் சூழ்நிலைகள் மாற்றமடைந்ததுடன் நவீன கலை இலக்கியங்களும் பிரசவமாகின. செத்துக் கொண்டிருந்த நாட்டுக்கூத்துக் கலைகள் பற்றி அச்சத்தோடு இருந்தனர் கலை இலக்கிய மேதாவிகள். சிலகலைகள் நாட்டுச் சூழ்நிலைகளால் மீண்டும் சமகாலப் புதிய கருத்துக்களோடும் நவீன மயமாகவும் புதிய வடிவிலும் புத்துயிர் பெற்று வளர்ச்சியடைவது நியதி.

இந்த நியதியினை உன்னிப்பாய் அவதானித்த எமது ஈழத்துக் கலை இலக்கிய ரசிகர்கள் சிலரும், கலை இலக்கிய மேதாவிகள் சிலரும் கனவு கண்டார்கள். திரு. மௌனகுரு. திரு. குழந்தை சண்முகம் போன்றோர் வடமோடி நாட்டுக்கூத்தின்பால் சில பரிசோதனை முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி பெற்றாலுங்கூட தென்மோடி நாட்டுக்கூத்தின் பக்கம் யாருமே முகத்தைத் திருப்பியதில்லை. அவ்வேளையில் கலை, கலாச்சாரப்படை எமது தேசத்தில் பலமற்று இருப்பதும் இதற்கு ஒரு காரணம் என்று கூறலாம்.

பவுத்திரமாகப் பாதுகாத்து எமது அடுத்த தலைமுறையினரின் கைகளில் ஒப்படைக்க வேண்டிய எமது பாரம்பரிய கலையான நாட்டுக்கூத்தின் புத்துயிர்ப்புக்கு எமது மண்ணில் அவதரித்த இந்த சகாப்த மனிதன் ''கலைச்குரிசில்'' நீ. வ. அந்தோனி அவர்களின் நினைவுமலர் நிச்சயம் வழிகோலும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. ஏனெனில் இந்த சகாப்த மனிதனின் உடலைத்தான் எம்மால் மண்ணுக்குள் புதைக்க முடிந்தது. இந்த மேதாவியின் உயிருள்ள கவிதைகளை எந்த மண்ணுக்குள்ளும் புதைக்க முடியாது. எந்தக் கடலலையிலும் கரைத்துவிட முடியாது. அந்த உயிரோட்டமான பாடல்களை இன்னும் எமது கரையோர மக்களின் உதடுகள் முணுமுணுப்பதை நாம் கேட்டுக் கொண்டுதான் இருக்கின்றோம்,

இந்தக் கவிஞனின் பாடல்கள் வெறும் காகிதத்தில் கிறுக்கிய வரிகள் இல்லை. உழைக்கும் மக்களின் இதயங்களிலே ஆழமாய் எழுதிச்சென்ற கருத்துச்செறிவுகள் நிறைந்த கவிதைப்பூக்கள்.

சகாப்த மனிதன் கலைக்குரிசில் அவர்கள் தென்மோடி நாட்டுக்கூத்தின் வழிகாட்டிகளில் ஒருவன் என்பதனை யாராலும் மறுக்க முடியாது.

அன்னார் சமயக்கதைகளையும், வரலாற்றுக் கதைகளையுமே பாடிவந்த நாட்டுக்கூத்துக் கலையை சமூகப்பார்வையில் வெளிக் கொணர்ந்தார். சமூகத்திற்குத் தேவையான கருத்துக்களையும் சீர்திருத்தக் கருத்துக்களையும் நாட்டுக்கூத்தினூடாக தமது பரி சோதனை முயற்சியில் வெளிக்கொணர்ந்து வெற்றி பெற்ற பெருமை கலைக்குரிசில் அவர்களையே சாரும்.

அவர் பண்டித மேதாவிகளைத் திணறடிக்கும் வகையிலான சொற்பதங்களைத் தமது பாடல்களில் எழுதியது மட்டுமல்லாது பாமரமக்களும் புரிந்து கொள்ளும் வகையிலான பாத்திர வார்ப் புகளோடு ஒன்றியதாகப் பாடல்களை அமைத்து மக்களின் உதடு களையும் முணுமுணுக்க வைத்தார்.

தூரத்துக் கிராமத்திலிருந்து மாட்டு வண்டில்களிலும், கால் நடையாகவும் நாட்டுக்கூத்தைப் பார்க்க பாய்பறியுடனும், கடலை கச்சானுடனும் வந்து இரண்டு இரவுகள் தொடர்ந்து நடைபெறும் முழுநீள நாட்டுக்கூத்தைப் பார்த்துச் செல்லும் மக்களின் கதை களைப்பற்றி இப்போதும் நமது அப்பு, ஆச்சிமார் வாயூற விவர ணம் செய்வதைக் கேட்டு நமக்கும் வாயூறுவதுண்டு.

கலைக்குரிசில் அவர்களின் நினைவுமலர் வெளிவரும். இந்த ஆண்டு கூட எம்பிரதேச நாட்டுக்கூத்தின் வரலாற்றில் பொறிக் கப்படவேண்டிய ஆண்டாகும். அதேவேளை தென்மோடி நாட்டுக் கூத்துத் தொடர்பாக அண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகளை உற்று நோக்கும்போது மீண்டும் தென்மோடி நாட்டுக்கலை புத்துயிர் பெற்று செழித்தோங்கும் என்பதில் ஐய மில்லை.

1902 பங்குனி 4ம்நாள் நீ. வ. அந்தோனி என்ற ஒரு தனி மனிதனின் பிறப்பு மட்டுமல்ல. தென்மோடி நாட்டுக்கூத்தின் விடி யலின் செம்பரிதிக் கீறலும் ஏற்பட்டது என்றுதான் கொள்ள வேண்டும். இவரால் எழுதப்பட்ட சமயக் கோட்பாடுகளை உள்ள டக்கிய நாடகங்களுள் குறிப்பிடக்கூடியன:

i புனித கிறிஸ்தோப்பர் ii தாவீது - கொலியாத்
iii புனித தொம்மையார் iv புனித செபஸ்தியார்

**சமூகக் கதைகளைக் கருவாகக் கொண்டவை**

1. ஆனந்தசீலன் 2. அலசு 3. ஞானஆனந்தன்
4. சகோதரவிரோதி 5. திருஞானதீபன் 6, மதிவீரன்
7. தர்மசீலன் 8. மந்திரிகுமாரன்

அவர் M. G. ராமச்சந்திரன் நடித்த "ராஜகுமாரி" திரைப் படத்தை நாட்டுக்கூத்தாக எழுதி மேடையேற்றி பாராட்டுதல்களை யும் பாரிய அளவிலான வரவேற்பையும் பெற்றார்.

1969 மாசி மாதம்03ம் திகதி புனித கிறிஸ்தோப்பர் நாட்டுக்கூத்து மேடையில் கலையரசு சொர்ணலிங்கத்தால் "கலைக்குரிசில்" பட் டமும் பெற்றார். அத்துடன் மெலிஞ்சிமுனை கலாமன்றத்திற்கும் கலைக்குரிசில் நாடகமன்றம் என்ற பெயரையும் பெற்றுக்கொடுத் தார்.

கலைக்குரிசில் நீ. வ. அந்தோனி அவர்கள் தவது கலைப்பணி யைத் தம் கிராமத்தோடு மட்டும் வைத்திருக்கவில்லை. யாழ்ப்பா ணக் கரையோரப் பகுதிகளிலும், தீவுப்பகுதிகளிலும் வேருன்ற வைத்தார். மண்டைதீவு, மாதகல், நாரந்தனை, எழுவைதீவு, மெலிஞ் சிமுனை போன்றவை இவர் பெயரைப் பறைசாற்றி நிற்கும் இடங் களாகும்.

கலைக்குரிசில் அவர்களால் எழுதப்பட்ட

"தாவீது கொலியாத்" நாட்டுக்கூத்து இந்த வருடம் மாசி மாதம் 1ம்திகதி மெலிஞ்சிமுனை "கலைக்குரிசில்" கலாமன்றத்தின் இளையதலைமுறையினரால் நோர்வே நாட்டில் மேடையேற்றப்பட்டுப் பாராட்டுப்பெற்றது. நோர்வே நாட்டு மக்களும் இதனை ரசித்துப் பார்த்ததுடன் பாராட்டினர். அன்னியநாட்டைச் சேர்ந்த வேற்று மொழி மக்களே பார்த்து ரசிக்கும் நமது பாரம்பரிய கலையான நாட்டுக்கூத்தை எப்படித்தான் எம்மால சாகவிடமுடியும்?

இப்படியே கலைக்குரிசிலின் சாதனைகளையும் புகழையும் முழுத் தரிப்பில்லாமல் எழுதிக்கொண்டே போகமுடியும்.

பல்கலைக்கழகப் பாடப்புத்தகங்களிலே இடம்பெற வேண்டிய ஒரு மாபெரும் கலைஞனுக்கும், அவனது மறைந்த பக்கங்களுக்கும் இன்றுதான் மலர்தூவ முன்வந்திருக்கிறோம்.

இம்முயற்சி அந்தக்கவிஞனுக்குக் காணிக்கை மட்டுமல்ல, உயிருக்குத் துடித்துக்கொண்டிருக்கும் தென்மோடி நாட்டுக்கூத் தின் புத்துயிர்ப்புக்கான வழிகோலும் விடியலுமாகும்.

*

# மரமும் விழுதும்

கலாநிதி சி. மௌனகுரு
நுண்கலைத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

யாழ்ப்பாணப் பகுதியில் ஆடப்படும் கூத்துக்கள் வடமோடிக் கூத்து, தென்மோடிக்கூத்து, காத்தான்கூத்து, கொட்டகைக்கூத்து எனப் பலவகையின. இவற்றுள் கத்தோலிக்கமதம் சார்பான கருத்துக்களைப் பெரும்பாலும் கூறுவதும், கரையோரப் பகுதிகளிற் பெரும் செல்வாக்குற்றதுவுமான தென்மோடிக்கூத்து முக்கியமானது. ஈழத்துத் தமிழ்நாடக உலகுக்கு முக்கியமான நாடகவிற்பன்னர்கள் பலரை இம்மரபு தந்துள்ளது.

தென்மோடிக்கூத்து மரபு யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்று, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, தம்பலகாமம் ஆகிய தமிழர் வாழ் பிரதேசங்கள் எங்கணும் வழங்கி வருகிறது. மட்டக்களப்புப் பிரதேசத்தில் இம்மரபில் வட்டமேடையும், ஆட்டமும் பிரதான அம்சம் பெறுகின்றன. ஆசியாவின் பிரதான நாடகமரபு ஆட்டமரபே என்பது அறிஞர் கருத்து. யாழ்ப்பாணத்தில் இம்மரபில் ஊறி வந்த வயது முதிர்ந்த அண்ணாவிமார்களுடன் நடத்திய பேட்டிகளினூடாக யாழ்ப்பாணத்திலும் இத்தென்மோடிக்கூத்துக்கள் முன்னர் வட்டமாக அமைக்கப்பட்ட மேடையில் முன்பக்கத்திரைகள் எதுவுமின்றி மக்கள் சூழ்ந்திருந்து பார்க்க ஆட்டங்கள் நிரம்பிய வகையில் நடத்தப்பட்டதாக அறிய முடிந்தது.

வட்டமேடையில் ஆடப்படுவதும், முன்பக்கத்திரைகள் இல்லாமல் நடிகர் பார்வையாளருடன் நேரடித்தொடர்பு கொள்ளுவதும் ஆட்டம் நிறைந்ததுமான இப்பண்புகள் பண்டைய நாடகங்களுக்குரிய முக்கியமான அம்சங்களாகும். இவ்வகையில் தென்மோடிக் கூத்தினை ஈழத்துத் தமிழரின் பிரதான பண்டைய நாடக வடிவங்களுள் ஒன்றாகக் கொள்ளப்படும் மேற்குலகில் இன்றைய நாடக விற்பன்னர்கள் பலர் நாடகத்தின் சாராம்சத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். நடிகர், பார்வையாளர் என்ற பேதத்தை நீக்கி பார்வையாளரைப் பங்காளர்களாக்கும் திசை நோக்கி அந் நாடகப் பரிசோதனை முயற்சிகள் செல்கின்றன. இதனை எம் கூத்துக்களில் நாம் முன்னரேயே செய்துள்ளோம் போலத் தெரிகின்றது.

இத்தென்மோடி நாடகமரபிற்கென்று சில பிரத்தியேகமான அம்சங்களுள்ளன. ஆடல் பாடல் மூலமாக ஒரு கதையை நிகழ்த்தல் இதன் முக்கிய அம்சம். இன்றைய நாடக நடிப்பு முறைகள் பலவற்றை இன்று இக்கூத்தாடும் நடிகர்கள் பெரும்பாலும் கையாளினும், இவர்களை அறியாமலேயே பண்டைய நடிப்பு முறைகளையும் இவர்கள் கைக்கொள்கின்றனர். பாத்திரம் தன்னைத்தானே அறிமுகம் செய்தல், சபையோரைப் பார்த்தபடியே எப்போதும் பேசுதல், எப்போதும் மேடையின் முன்பக்கம் வந்து தன் பாகங்களைச் சபையோரிடம் ஒப்புவித்துச் செல்லல், உரத்த தொனியில் எப்போதும் உரையாடல், இயற்கைப் பாங்கில் அமைந்த நடை அசைவு என்பன இவற்றுள் சில.

உலக நாடக வரலாற்றை நோக்குமிடத்து நடிப்பு முறைகள் காலத்துக்குக் காலம் வேறுபட்டு வந்தமையை அவதானிக்கலாம். எதற்கும் ஒரு வரலாறு இருப்பதுபோல நடிப்புக்கும் ஒரு வரலாறு உண்டு. நடிப்பு வரலாற்றின் பின்னணியில் தென்மோடிக் கூத்தின் நடிப்புமுறை ஆராயப்படவேண்டும்.

இன்று கூத்துக்களை நடத்தும் இளம் தலைமுறையினர் பலர் சினிமாவைப்போலவே கூத்துக்களையும் செய்வதிற்பெரும் சிரத்தை காட்டுகின்றனர். சினிமா நடிப்பு, சினிமா உடுப்பு, சினிமாப்பாடல் என்பவற்றைக் கூத்துக்களிலும் கையாள முயலுகின்றனர். கூத்து வேறு. சினிமா வேறு. இரண்டும் இருவேறுபட்ட கலை ஊடகங்கள். இதன் உண்மையை இவ்விளம் தலைமுறையினர் உணரவேண்டும். அல்லாவிடின் கூத்தும் அல்லாத, சினிமாவும் அல்லாத ஒரு புது வகைக்கூத்துக்கள்தான் நம்மத்தியில் தோன்றும்.

இக்கூத்தில் ஈடுபட்டுழைக்கும் இளம் தலைமுறையினருக்கு இன்னுமோர் கடமையுமுண்டு. இக்கூத்து சம்பந்தமான நூல்கள் அனைத்தையும் தேடித்தொகுப்பதும், இக்கூத்துக்கு இதுவரை உழைத்த அண்ணாவிமார், நடிகர், பாடகர், இசைகாரர், ஒப்பனைகாரர், மேடையமைப்போர் பற்றிய தகவல்களைத் திரட்டிச் சேகரிப்பதும் நமது கடமையாகும்.

வசதியும், செல்வாக்கும் மிக்க அண்ணாவிமார்களினதும் நாடகக்காரர்களினதும் பெயர்கள் வெளியில் தெரியுமளவுக்கு வசதி குறைந்த செல்வாக்கற்ற திறமையான அண்ணாவிமார்களின் பெயர்கள் வெளியிற் தெரியவில்லை. அப்பெயர்கள் மக்கள் மன

தில் மாத்திரம் தானுள்ளன. மக்கள் மனதில் மாத்திரம் பதிந்துள்ள மதிப்பிற்குரிய அப்பெயர்கள் வெளியிற் கொணரப்பட வேண்டும்.

இவ்வகையில் 30 வருட காலத்திற்கு மேலாக தென்மோடிக் கூத்து மரபு நாடகத்தை வளர்ப்பதில் நடிகராயும், அண்ணாவியாராயும் ஈடுபட்டு உழைத்த திரு. நீ. வ. அந்தோனி அவர்களின் சிறப்பை எல்லோரும் அறியச்செய்யும் வகையில் ஒரு இதழ் வெளியிட முன்வந்தமைக்காக கரம்பொன் மக்கள் மதிப்பிற்குரியவர்களாயிருக்கிறார்கள்.

திரு. நீ. வ. அந்தோனி அவர்கள் ஊசோன் பாலந்தை என்ற இரண்டு நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற தென்மோடிக்கூத்தில் பெப்பேனிய அரசராக நடித்து அன்று மக்கள் மனதில் நீங்கா இடம்பெற்றவர்.

நடிகர் மாத்திரமன்றி அவர் ஒரு நாட்டுக்கூத்துப் புலவர் எனவும், அண்ணாவியார் எனவும் அறிகிறோம். கிறிஸ்தவப் பெரியார்களின் தியாக வரலாறுகளும், வரலாற்றுக்கதைகளும் அவரால் நாடகமாக்கப்பட்டுள்ளன. நாட்டுக்கூத்துப் போட்டிகளிற் கலந்து வெற்றிகள் பல பெற்றவர். அவரின் சேவையினையும் திறமையினையும் பாராட்டி 1969 இல் கலையரசு சொர்ணலிங்கம் தலைமையில் மக்கள் அவருக்கு கலைக்குரிசில் எனும் பட்டமளித்து கௌரவித்துள்ளனர்.

இலங்கையின் வடபகுதியில், மெலிஞ்சிமுனையில் வாழ் இப் பெருமகன் ஈழத்துத் தமிழர் நாடக மரபென்ற பேர் ஆலமரத்தைத் தாங்கி நிற்கும் விழுதுகளில் ஒன்று. இத்தகையோர் நமது இளம் தலைமுறையினர்க்கு அறிமுகம் செய்யப்படவேண்டியவர்கள், கௌரவிக்கப்படவேண்டியவர்கள்.

ஈழத்துத் தமிழரின் நாடக மரபுகளுள் ஒன்றான தென்மோடி நாடகமரபைத் தாங்கும் விழுதுகளுள் ஒன்றின் பாராட்டு விழாவில் நானும் கலந்து கொள்வதில் பெருமகிழ்வடைகின்றேன்.

*

# நெய்தலில் தவழ்ந்த கவிதைமுத்து

ச. மிக்கேல்தாஸ்
மெலிஞ்சிமுனை

தீவுப் பகுதியின் வளங்கொழிக்கும் மருத நிலப்பரப்பமைந்த கரம்பொன் விளை நிலத்தின் தென்பகுதியிலே நெய்தல் நிலமுண்டு. அலைகடல் தவழ்ந்து விளையாடும் அந்த மெலிஞ்சி நகர் கிராமத்தில் வாழ்ந்து தமிழ்க்கலை உலகிற்கும் தென்மோடி நாட்டுக் கூட்டத்திற்கும் அழியா வழிசமைத்து அமரத்துவமடைந்தவர் கலைக்குரிசில், நீ, வ, அந்தோனி அண்ணாவியார் அவர்கள். அவரின் புகழ் இலைமறை காயாக மறைவுற்றிருந்தபோது நம் இளையதலைமுறை உய்த்து உணரும் வண்ணம் வரலாற்று மலர் இதழ் விரியும் இவ்வேளை அவர் சாதனைப்பட்டியல் சிலவற்றை புரட்டிப்பார்ப்போம்.

நாடக மேடையில் நவரசங்களை சித்தரித்து கவிதை மழை பொழிந்து பாவங்களை வடித்துக்காட்டும் அந்த காவிய விற்பன்னர் வாழ்ந்த 30 வருடங்களுக்கு முற்பட்ட பக்கங்களை பின்னோக்கி புரட்டுவோம். ஆரம்பகாலத்திலே மேடை நாடகங்களில் சிறு கதாபாத்திரங்களில் தோன்றி நடித்தார். காலக்கிரமத்தில் நாட்டுக்கூத்தின் பற்று அந்த மீனவர் கிராமத்தை இறுக அணைத்துக்கொண்டது. கலைவளர்ச்சி அங்கு வியாபித்தது.

ஊசோன் பாலந்தை எனும் இரண்டு நாள் தொடர் நாடகம் நடந்தபோது யாவரும் வியக்கும் வண்ணம், பாத்திரங்கள் யாவும் மெருகூட்டப்பட்டு ஏகோபித்த முறையில் இலக்கிய ரசிகர்களால் பாராட்டப்பட்ட போது அக்கிராமத்தின் பெயர் நாடக வரலாற்றில் முன்னணி வகுத்தது கலைக்குரிசில் அவர்கள் அந் நாடகத்தில் பெப்பேனிய அரசராக பிரதான பாத்திரத்தில் இரண்டு இரவுகளாக நடித்துப் புகழடைந்தார்.

இதை நோக்கும் போது வியப்பென்ன வென்றால் அண்மையில் அந் நாடகத்தை ஓர் இரவுக்கு மட்டுமென குறைத்து தொடர் சாதனங்கள் நவீனப்படுத்தப்பட்ட இந்நாளில் அவர் நடித்த அரசன் பாத்திரத்தை 3 நடிகர்கள் பிரித்து நடித்திருக்கிறார்கள்! இதுவே அவரின் சாதனையாகும்.

நடித்துக் கொண்டிருக்கும் காலத்திலேயே கவிஞராகி மக்களின் வாழ்க்கையையும் அவர்களின் இயல்பையும் கற்பனை நயத்தோடு படம் பிடித்துக் காட்டினார் அவர் வரலாற்று நாடகங்களையும் கிறிஸ்தவப் பெரியார்களின் தியாக வரலாறுகளையும் எழுதி மக்களின் மனக்கண்களில் பதித்தார்.

விக்கிரமாதித்தன் கதையில் வரும் மந்திரிகுமாரன் படலத்தை பகுதியாக்கி பிரபாகரன் என்ற பெயரிலும் தமிழக முதல்வர் எம். ஜி, ஆர் முதல் கதாநாயகனாக நடித்த ராஜகுமாரி சினிமாவை அதே வடிவில் நாட்டுக் கூத்தாக்கி இளைஞர்களைக் கொண்டு நடிக்க வைத்துப் புகழடைந்தார். அவர் கைவண்ணத்தில் உரு வான காவியங்கள் புனித கிறிஸ்தோப்பர். புனித தொம்மையர் புனித செபஸ்தியர், தாவீது கொலியத், ஆனந்தசீலன் அலசு, ஞானனந்தன், சகோதரவிரோதி, மதிவிரன் ராஜகுமாரி, மந்திரி குமாரன் ஆகியன. கரம்பனூர் பண்டிதர் திரு. சோ தியாகராசா அவர்கள் விதாணையாக இருந்த காலத்தில் வட மாகாணத்தில் அரசினரால் நடாத்தப்பட்ட கலை கைப்பணி விழாவில் தன் திற மைக்கு மகுடம் சூட்டும் விதமாக சங்கக் காலத்தில் தமிழன் கப் பல் மூலம் வாணிபம் செய்யும் வரலாற்றை வடித்துக்காட்டி அர சின் பரிசும் பாராட்டும் பெற்றார் அடுத்த திருப்பமாக கரம்பொன் சிறிய மகளிர்மகா வித்தியாலயத்தில் நடந்த நாடக விழாப் போட்டி யில் சாவிது கொலியாத்து நாட்டுக் கூத்தை - இளைய தலைமுறை யினரை வைத்து நெறிப்படுத்தி முதன்மை விருதினைப் பெற்றார் இப்போட்டியில் பிரபல அண்ணாவியார் திரு. பூந்தான் யோசேப்பு நெறிப்படுத்திய நாடகமும் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

1969-ம் வருடம் மாசி மாதம் 3-ம் திகதி நாடகத்தந்தை கலை யரசு சொர்ணலிங்கம் அவர்களின் தலைமையில் கலைக்கவி எஸ் தாக்கி, உலகத்தமிழாய்வு மகாநாட்டில் கவிபடைத்து புகழடைந்த கலைஞர் இ. நாகராசன் போன்ற பெரியோர் முன்னிலையில் அன் னாருக்கு கலையரசு அவர்கள் கலைக்குரிசில் என்னும் பட்டமளித்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

கலைக்குரிசில் அவர்களின் மதி நுட்பமான நெறிப்படுத்தலினால் இன்றைய தலைமுறை எவரின் உதவியுமின்றி தாள, நயம் பிசகாது நடிக்கும் திறமையைப் பெற்றுள்ளது.

அவர் ஒவ்வொரு குடிமகனும் நாடகத் துறையில் மிளிர்வ தற்கு கைமாறு கருதாமல் கலைச்சேவை ஆற்றி நாடகக் கலையின் வளர்ச்சியை ஏற்படுத்தினார்.

கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் செய்யாமல் காலம் தாழ்த்தியாவது நம் தலைமுறை அவரை நினைவு கூரும் இவ்வேளை யில் காலத்தால் அழியாத காவியங்களைப் படைத்த அன்னாரின் நினைவு மலரில் இந்த அரும்பையும் காணிக்கையாக சமர்ப்பிக் கின்றேன்.

# புகழ் பூத்த புலவர்

*அலைகடல்சூழ் மெலிஞ்சிமுனை நகரதனில்,*
*அருங்கவிப் புலவராய் அந்தோனிதான் திகழ்ந்தே*
*கலைக்குரிசில் பட்டமும் தான் பெற்றே*
*கலைஞனாய் வாழ்ந்திட்டார் இத்தரையில்.*

*செந்தமிழின் மொழியிலே பாட்டிசைத்து*
*சொந்தமாய் கதைகோர்த்து தாளம் சேர்த்து*
*விந்தையாய் மேடையிலே தான் நடித்தே*
*வியப்புறச் சித்தரித்தார் புகழோங்க.*

*நாடகமும் நாட்டுக்கூத்தும் தான் புனைந்தே*
*நற்பொருள் இனிதாய் சிந்தைத்து*
*நாட்டமாய் இயற்றிய வெண்பாவும்*
*நல்லதோர் பேரெடுத்தார் அண்ணாவி என்றே.*

*ம. சிந்தாத்துரை*
நாவாந்துறை.

புவனேந்திரன் - தரு

வண்டுமுறை கருங்கூந்தல் கார் முகில்
கொண்ட அழகிதுண்டோ- கருமை விழி
ஒளி காணுதே இந்த வில்வ மலரினிலே
ஈடுசொல்லுமோ இம்மலர் உந்தன்
சோதி மதி முகத்திற் - கிணை ஏது எனதுயிர்
ஒவிய ஒளியான மோகினியே.

*(அந்தோனி அண்ணாவியாரின்*
*ராஜகுமாரி நாடகத்திலிருந்து)*

# ஒரு நண்பனின் நினைவுகளில்....

அ. லூக்கேஸ், மெலிஞ்சிமுனை

எனது பால்ய நண்பன் கலைக்குரிசில் நீ. வ. அந்தோனி அண்ணாவியார் அவருக்கு எனது இதய அன்பை அவருடைய நினைவு மலரில் சமர்ப்பிக்கிறேன்.

நண்பர் மத்தேஸ் மகிறம்மா நாட்டுக்கூத்துத் தொடக்கம் ஊசோன் பாலந்தை வரை பல நாட்டுக்கூத்துக்களில் பாடல் நடிப்புக்களில் புதிய யுத்திகளைக் கையாண்டு சிறப்புற்றார்.

பல தென்மோடி நாட்டுக்கூத்துக்களை எழுதி பழக்கி எமது கிராமம் நாட்டுக் கூத்தில் புகழ் பெற்று விளங்க அவர் வழி சமைத்தார்.

கோவில் பங்கிற்கு பங்காற்ற குத்தகைப் பொறுப்பேற்று கோவில் வளர்ச்சிக்கு சேவை புரிந்தார். எமது கிராமத்திற்கு விசகடி வைத்தியராக சேவை புரிந்ததுடன் முதலுதவி புரிபவராகவும் திகழ்ந்தார். நண்பரின் நற்குணங்களை நான் சொல்ல வேண்டியதில்லை.

அன்னாரின் நாட்டுக்கூத்து பலவற்றில் நான் முன்னின்று செயற்பட்டிருக்கின்றேன்.

நண்பருடைய நினைவு மலர் என்றும் நம்மிடையே மணம் பரப்ப வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

# கடலில் பிறந்த முத்து

ஆ. சபாரத்தினம்

முன்னாள் அதிபர், சண்முகநாதன் மகாவித்தியாலயம்.

மிகப் பழையகாலத்திலிருந்தே நாடகத் தமிழ் நம்மக்களைப் பண்பட்டவர்களாக்கி, உன்னத இலட்சியங்களைப் புகட்டி வந்தது. தொழில் புரியும் பெருந்தொகையானமக்கள் தம்சிறு தேவைகளைப் பெறச் சிறிதளவு உழைத்தும் மீதிநேரத்தைப் பண்பாட்டு கருமங்களில் செலவிட்டும் வாழ்ந்தனர். சமயமே உயிர்நாடியாக இருந்தபடியால், சமய அறிவு வளர்ச்சிக்கும் ஒழுக்கம்,பக்தி மேம்பாட்டுக்கும் ஏற்றவகையில் இசை, நாடகக்கலைகள் போற்றி வளர்க்கப்பட்டன. அதனால் ஓய்வுநேரத்தை எப்படிப் பயன்படுத்துவது என்ற தற்கால நாகரிக சமுதாயங்களை எதிர்நோக்கும் பிரச்சினை அக்காலத்தில் எழவில்லை. தொழில் புரியச் செல்லும் நேரம் தவிர மீதி வேளைகளில் அண்ணாவிமாரைக் கொண்டு நாடகங்களைப் பழக்கி அரங்கேற்றினார்கள். அண்ணாவிமார் இல்லாத ஊர்களில் பிற ஊர்களிலிருந்து அழைத்து வந்து அவர்களைப் பராமரித்தும் இளைஞர்களுக்குப் பழக்கினார்கள்.

மெலிஞ்சிமுனை அதிருஷ்டம மிக்க கிராமம். அங்கு நாட்டுக் கூத்து அண்ணாவியார் பிறந்து வளர்ந்து மக்களிடையே மக்களாக வாழ்ந்து கலைகளைப் பழக்கிவந்தார். வருடந்தோறும் கூத்துகள் மேடையேற்றப்பட்டன. ஐந்து. ஆறுமைல்களுக்கு அப்பால் இருந்தும் அயற்கிராமமக்கள், கூத்துக்கலையில் ஆர்வமுள்ள ஆண் பெண்கள் அனைவரும் திரண்டுவந்து பார்த்துச் சுவைத்துச் சென்றனர். மாதக்கணக்கில் கூத்துக்கதையாகவே இருக்கும் இவ்வளவுக்கும் பல தசாப்தங்களாகப் பணியாற்றியவர் அண்ணாவியார் அந்தோனியவர்கள்.

அந்தக் காலத்தில் நம் தீவுப்பகுதியில் கலையார்வம் உள்ள அனைவருக்கும் அண்ணாவியாரைத் தெரியும். ஆண்டாண்டு காலமாகத்தாம் கல்வீடு கட்டாது பணம் தேடிக் குவிக்க விரும்பாது நாளும்பொழுதும் கூத்துக்கலைப் பயிற்சிக்கே காலத்தைச் செலவிட்டார். பேர், புகழ், பத்திரிகை விளம்பரம் போன்றவற்றை நாடாது குடத்துள் விளக்குப்போலிருந்து பணியாற்றினார். இளமையில் பிறர் எழுதிய நாடகங்களைப் பழக்கியவர் அனுபவ முதிர்ச்சியால் தாமே நாடகம் எழுதினார். பல தலைமுறை நடிகர்

களைத் தயாரித்தார் டிருமாவும் சினிமாவும் வந்தும் நாட்டுக் கூத்து அழிந்துவிடாதுகாத்தார்.

இன்று இளைஞர் சமூகம் அவரை நன்றியுடன் நோக்குகிறது. இன்று அப்படிக் கலைத் தியாகிகளைக் காணமுடியவில்லையே என்று அங்கலாய்க்கிறது தோமஸ்கிறே என்றகவிஞர் பாடியவாறு,

'கடலின் ஆழத்தில் அருமந்த முத்து பிறந்து மறைந்துவிட்டது
காட்டின் நடுவே அரும்மலர் பூத்துக் கண்டுசுவைப்பார் அற்று
உதிர்ந்துவிட்டது''

என்ற நிலை இல்லாது அக்கலைக்குரிசில் மறைந்து இருதசாப்தம் முடியுமுன்னரேனும் அன்னார் நினைவு மலர் வெளியிட அவர் வளர்த்துவிட்ட இளங்கலைஞர் முன்வந்தமை பாராட்டுதற்குரியது. அவர்கள் கலைஞருக்கு எழுப்பும் நினைவு ஆலயம் அவர் வளர்த்த கலையை அழியவிடாது தொடர்ந்து வளர்ப்பதுவே. பணம், பேர் புகழ் என்று அலையாது, மனிதரை நல்லமனிதராக, உயர்த்தும் அருங்கலைகளை ஆண்டுதோறும் மேடையேற்றுவதே தக்கது. வாழ்க இளம்கலை ஆர்வலர் முயற்சி!

*

**புவனேந்திரன் கொக்சகம்**

*ஐயிருமா திங்கள் என்னை அரும்வயிற்றில்*
*தாங்கி வெகு-மெய்யது வருந்திப்பெற்று*
*மேதினியிலே வளர்த்த – துய்ய எந்தன்*
*அன்னையரே உன்*
*சுகிர்த மொழிபோல் நடப்பேன்*
*ஐயமற இதை அரசிக்கறைய*
*அனுமதி அருளே!*

*(அந்தோனி அண்ணாவியாரின்*
*ராஜகுமாரியிலிருந்து எடுக்கப்பட்டது)*

# நாட்டுக்கூத்தை வாழவைத்த
# கரம்பொன் அண்ணாவியார்

*கரம்பனூர் பண்டிதர் சோ. தியாகராசபிள்ளை*

நமது ஈழத்து நாட்டுக் கூத்துக்கள் பலநூற்றாண்டுகளுக்கு முந்தியதாக அமைகின்றது இன்றைய நிலையில் இருநூறு வரை நாட்டுக்கூத்துக்கள் உருப்படியாக இருக்கின்றன என்பது மகிழ்ச்சியான செய்தியே.

பண்டைய நாட்டுப் பாடல்கள் சிறிது வளர்ச்சி அடைந்து நாடகங்களாக, நாட்டுக்கூத்துகளாக தோன்றின என்று கூறலாம்.

நவீன நாகரிகத்தின் செல்வாக்கினால் சினிமா, டிருமா போன்றவைகளால் நாட்டுக்கூத்து மரபுகள் சிறிது நலிவடைந்துள்ளன.

நாட்டுக் கூத்தானது தேசியத் தன்மை வாய்ந்த கலையாக வளர்ந்ததினால் கிராமங்களை விட்டு அது அகலவில்லை. நாட்டுக் கூத்து மக்களின் இரத்தத்துடன் ஊறி நின்றதினால் உயிருடனே வாழ்ந்தது.

கூத்துக்களுக்கு உயிர் நாடியாக விளங்குவது ஆட்டமும் இசையுமாகும். கூத்துக்கள் அபிநயத்துடன் கூடியும் குறைந்தும் இருவகைப்படும் இவைகளை வடமோடி, தென்மோடி என அழைப்பது மரபு.

வடமோடி மன்னார் மட்டக்களப்பு பகுதியையும் தென்மோடி யாழ்ப்பாணப் பகுதியையும் கொண்டு இன்று விளங்குகின்றன இரு வகைக் கூத்துக்களையும் கத்தோலிக்க தமிழரும் சைவத் தமிழரும் நன்கு எழுதியிருக்கிறார்கள் ஆனால் சைவர்களின் பங்கு கணக்கில் குறைவாகவே இருக்கிறது.

நாட்டுக்கூத்து பல காரணங்களால் புறக்கணிக்கப்பட்டிருந்த போதிலும் மட்டக்களப்பு, மன்னார், யாழ்ப்பாணத்தில் பாசையூர், நாவாந்துறை, காவலூர், வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் அணையாத விளக்காக விளங்கி நிற்கிறது.

1948 இல் இலங்கை சுதந்திரம் அடைந்தும் நமது பாரம்பரியம் உணரப்பட்டு இப்போதைய அரசாங்கத்தால் 1952 இல்

கலைகளைப் பேணிக் காக்கவென இலங்கைக் கலைக் கழகம் உதய மாயிற்று. இதன் முன்னோடியாகப் பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்கள் பலர் உழைத்தனர். இதன் விளைவாக சிங்களக் கூத்துகளும் பல வெளிவந்தன. நாட்டுக்கூத்தின் நீண்டகால இரவு மெல்ல நீங்கி அண்ணாவிமார்களின் பொற்காலம் உதயமாயிற்று. இனி நமது இடத்திற்கு வருவோம்.

காவலூரில் கரம்பொன் இணைப்பாக அமைந்துள்ள ஒரு கிராமம். மூன்று நல்லாயர்களை ஈன்றெடுத்த புண்ணியமும் இதற்குண்டு. கரம்பொன் தெற்குப்பகுதியில் மெலிஞ்சிமுனை உண்டு. இந்தப்பகுதி நாட்டுக்கூத்தின் விளைநிலம். ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக யாமறிந்த வரையில் கோடையில் மத்தளஓசை கேளாத நாளில்லை. தொட்டிலிலும் பாட்டுவரி கேட்கும். கொட்டிலிலும் தொடர்ந்து நிற்கும்.

எமது சிறுவயதில் வழிவழியே ''அப்படியும் சொன்னனே, அந்தவத்தகண் அப்படியும் சொன்னனே'' என்றவரி அவர்களுடன் எமக்கும் வாயில் வரும். அலைகடலில் ''துரும்பானேன்'' என்ற பாடலும் வெளிவரும். இப்படி எத்தனையோ பாடல்களின் நினைவுகள் தோன்றும்.

மழைகாலம் நின்றுவிட்டால் கரம்பொன் முழுவதும் ஒரே கூத்து விழாதான். அரைச்சோடனை எப்போ, முழுச்சோடனை எப்போ என்ற கேள்விதான். வசதி குறைந்த வாழ்க்கையிலும் கூத்து கலகலப்புத்தான். அந்தோனி அண்ணாவியார் அவர்கள் யாழ்ப்பாண மண்ணில் பிறந்து கரம்பனை புகுந்த இடமாகக் கொண்டார். இவருக்கு கித்தோரி அருமை மனைவியாக வாய்த்தார். மனைவி மக்களையும் யாம் அறிவோம். மனைவியின் ஒத்துழைப்புக் கிடைத்திராவிடில் அவர் திறமையான அண்ணாவியாக மிளிர்ந்திருக்க முடியாது.

அண்ணாவிமார்களில் சிலர் நன்கு எழுதுவார்கள். சிலர் பாடலை சொல்லிக்கொடுப்பார்கள். சிலர் வளமான குரலுடன் பாடுவார்கள். நமது அண்ணாவியாரோ மேலே குறிப்பிடும் முழுத்திறமையும் வாய்ந்தவர். பல கிறிஸ்தவ சமுதாய நாட்டுக்கூத்துக்களைத் தாமாகவே எழுதியுள்ளார். அவைகள் அவரின் மகனின் நெறிப்படுத்தலுடன் மேடையேற்றப்படுவதை யாம் அறிவோம்.

அந்தோனி அண்ணாவி அவர்கள் குரல்வளத்தில் கிட்டப்பா தான். நாலரைக்கட்ட சுதியில் பாடுவார். இறக்கியும் பாடுவார்.

வேடம் போட்டு இராசபாத்திரம் ஏற்ருல் ஊர்காவற்துறை வரை அவரின் குரல் எட்டும். இன்றைய ஒலிபெருக்கி வசதிகள் இல்லாத காலத்தில் நாட்டுக்கூத்துக்களை மேடையேற்றியவரல்லவா?

அவர் கூத்தைப் பழக்கும்போது மிகக்கவனமாக இருப்பார். கொப்பியும் தேவையில்லை. பள்ளிக்குப் போகாத அனேகரை அவர் அரசவேடம் போடவைத்த சிறப்பை இன்னும் அறியலாம். அவர் வழித்தோன்றியவர்கள் இன்னும் இருக்கிருர்கள்.

அந்தக்காலத்தில் மெலிஞ்சிமுனையில் சோடனை என்ருல் மக்களின் படையெடுப்பாகவே இருக்கும் யாழ்ப்பாண மண் முழுவதும் வந்து நிறையும். பிரபல அண்ணாவிமார்களான பொன்னுத்துரை, பூந்தான் யோசேப், சில்லாலை லூயிஸ், சவிரிமுத்து, நாரந்தனை அருளப்பு முதலியோர் நமது அண்ணாவியார் அருகே வந்து நிற்பார்கள்.

யாமறிய முன்பு கரம்பொன் மண்ணில் யாக்கோப்பு நாடகம், ஊசோன் பாலந்தை, எஸ்தாக்கியர் ஞானரூபன், ஞானசவுந்தரி, மந்திரிகுமாரி, அலங்காரரூபன் முதலிய எத்தனையோ கூத்துக்கள் மேடையேறியுள்ளன. இதன் சூத்திரதாரி நமது அண்ணாவியார் என்று சொல்லவேண்டியதில்லை இவற்றை அழகுபடுத்திய அண்ணாவியாருக்கு நமது கிராமம் நன்றி கூறவேண்டும். இன்று கரம்பொன் தெற்குக் கிராமம் பொலிவடைந்துள்ளது. கல்விக்கூடமும் நற்பணியாற்றுகிறது. கிராமத்தை மேம்படுத்தும் முகமாக யேசுராசாவின் திருக்கோவில் கம்பீரமாய்ப் பொலிவுடன் விளங்கி நிற்கிறது.

நாட்டுக்கூத்துக் கலையை காவலூரில் வளங்கொழிக்க வழி வகுத்த நமது அண்ணாவியாரை மறவாது இருக்க இறைவனைப் பிரார்த்திப்போமாக!

# அந்தோனி அண்ணாவியாரின் வாழ்க்கை வரலாறு

எஸ். மகேஷ் - மெலிஞ்சிமுனை

கலைஞர்கள் வாழ்கிறார்கள் இறைவன் அவர்களுக்களித்த ஆற்றல்களையும் திறமைகளையும் வளர்த்து சமுதாய நலனுக்காக அவற்றைப் பயன்படுத்தி தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தமக்குக் கை வந்த துறையிலே செலவிட்டு உழைக்கிறார்கள் குறிப்பிட்ட கலையில் புதுமை செய்தும் ஆக்கத்திறனோடு அக்கலையைச் சிறப்புச் செய்தும், மக்கள் மத்தியில் பாராட்டும் மதிப்பும் பெற்று அழியாப் புகழைத் தேடிக் கொள்கிறார்கள்.

ஈழத் தமிழ் நாடகத் துறையிலே பழமைச் சிறப்பு வாய்ந்தவை வடமோடிதென் மோடி நாட்டுக் கூத்துக்கள் ஆகும். இவற்றில் தென்மோடி இன்று வரை ஈழத்தின் கரையோரப் பகுதிகளில் இன்றும் அழியாது பாதுகாக்கப்பட்டு இக்கால சந்ததியினர் கண்டும் கேட்டும் அனுபவிக்க முடிகிறதாயின் அது ஒரு சில கலைஞர்களின் அருமுயற்சியின் பயன் என்றே கூற வேண்டும்.

தீவுப் பகுதியிலே குறிப்பாய் காவலூரின் தென் திசையில் அமைந்துள்ள மெலிஞ்சிமுனையில் தென்மோடி நாடகக்கூத்து இன்றும் புத்திரமையுடன் தொன்மைச் சிறப்புக் குன்றாமல் வாழ்ந்து கொண்டு இருக்கிறது. இக்கலைக்கு வளமூட்டி வாழவைத்தவர்களில் விலை நிலைநாட்டியவர் காலஞ்சென்ற "கலைக்குரிசில்" நீ. வ. அந்தோனி அண்ணாவியார் பெருமை மிக்க இடத்தை எடுக்கின்றார்.

யாழ். மாநகரத்தில். இயற்கை எழில்சிந்தும், கடலலை சூழ்ந்த நாவாந்துறை என்னுமிடத்தில் 1902ம் ஆண்டு பங்குனித் திங்கள் 4ம் நாள் அண்ணாவி. அந்தோனி அவர்கள் நீக்கிலான். வயித்தியான், மதலேனா ஆகிய இருவருக்கும், ஏகபோக. வாரிசாக. அவதரித்தார், அவரின், ஆரம்பக்கல்வி 3ம் வகுப்புடன் இடைநிறுத்தம் செய்யப்பட்டது.

செய்யும் தொழிலே தெய்வம், என்னும், ஆன்றோர் வாக்கிற்கொப்ப, கடல்படு, திரவியத்தின் பால் ஈர்க்கப்பட்டு, கடற்றொழிலில் ஈடுபட்டார். தன் 20ம் பராயத்தில் அன்னை தந்தையரின் ஆசி

யுடன் உத்தம பத்தினியான விக்ரோறியாவை, திருமறை விதிப் படி மணம்புரிந்தார், காலக்கிரமத்தில் அவர்களுக்கு சவிரிமுத்து என்னும் புதல்வன் பிறந்தார்.

அந்தோனி அண்ணாவியார் தமது 25ம் வயதில், பிறந்த இட மாகிய நாவாந்துறையைவிட்டு தொழில் புரியும், மாறுதலுக் கேற்ப தீவுப்பகுதியிலுள்ள கரம்பொன் பதியை நாடிச் சென்று தொழில் புரியும் காலத்தில் அவ்விடத்தை நிரந்தர இருப்பிடமாக் கிக் கொண்டார்.

தொழில் துறையுடன் இவரது கவனம், கலைத்துறையிலும். ஈர்க்கப்பட்டலாயிற்று, தனது முப்பத்திரெண்டாம் வயதில் மாமன் னனுக்குரிய வீறுநடை கொண்டு. கணீரென ஒலிக்கும் கலகலப் பான குரல் தொனியுடன், மத்தேஸ். மகிறம்மா எனும் நாட்டுக் கூத்தில் முதன்முதலாக நடித்து ரசிகர்களால், பாராட்டப்பட்டார் கலைஞரது இரண்டாவது நாடடுக்கூத்தாக வீரத்திற்கும், சிங்கேறு போன்ற வீர நடைக்கும், சிறந்த நடிப்புற்கும் மெருகூட்ட ஊசோன் பாலந்தை எனும் நாடகம், அமைந்தது. இதில் சிறப்பான பாத்திர மான பெப்பேனிய அரசன் பாத்திரத்தை தாங்கி தொடர்ந்து 2 இர வுகள்நவீன வசதிகளோ ஒலிவாங்கியோ அற்ற அக்காலத்தில் சளைக்காது நடித்து பெப்பேனியன் என்னும் பெயரைத் தட்டிக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து தன் கற்பனை வளத்தை விரிவடையச் செய்து பல கற்றறிந்த பெரியார்களின் உதவியுடன் அந்தோனி' அண்ணாவியாரானுர், அவர் புகழ் சிறப்புற்றேருங்கவே பல இடங் களுக்கும் சென்று தன் முத்திரையை பதித்தார், அவர் மாதகல், எழுவைதீவு, மண்டைதீவு, இளவாலை, முல்லைத்தீவு, நாரந்தனை, கரம்பொன் ஆகிய இடங்களில் கலைச்சேவை செய்தார். பல சமய சமூக நாடகங்களை இயற்றி அரங்கேற்றி நாடகப் பரிசும் பெற்றுர்.

அவர் கிராம பொதுசேவையிலும் ஈடுபாடுடையவராக விளங் கினுர், விஷகடி வைத்தியத்திலும் ஈடுபட்டு மக்களுக்குச் சேவை புரிந்தார். இவரது கலைச் சேவையின் புகழ் வியாபிக்கவே சான் றேரும் அறிஞர்களும் அன்னுரைக் கௌரவிக்க எண்ணி.

03.02.1969ல் மெலிஞ்சிமுனை நாடக மேடையில் புனித கிறிஸ் தோப்பர் நாடக அரங்கேற்ற வேளையில் கலையரசு, கே.

சொர்ணலிங்கம் தலைமையில் "கலைக்குரிசில்" பட்டமளித்து பொன்னாடை போர்த்தி அவரின் கலைச்சேவையை பாராட்டியது அக் கிராமத்தின் வரலாற்றுப் பெருமை மிக்க நிகழ்வாகும்.

20-01-1971ல் கலைக்குரிசில் அவர்கள் அமரரானார்.

தொன்மைச் சிறப்பு வாய்ந்த தென்மோடி நாட்டுக் கூத்து அமரரின் வழி வந்த மைந்தன் அந்தோனி சவிரிமுத்து அவர்களின் நெறியாக்கத்தில் கலைக்குரிசிலின் காவியங்கள் பல பகுதிகளிலும் மேடை யேறிக் கொண்டே இருக்கிறது.

கலைக்குரிசிலின் "தாவீது கொலியாத்" நாட்டுக்கூத்து நோர்வே நாட்டில் அன்னாரின் பேரன் யோண்பீற்றர் நெறிப்படுத்தலில்.

1-2-1989ல் மேடையேறி அன்னிய நாட்டு மக்களால் பாராட்டைப் பெற்றது.

---

**கப்பல்காரன் தரு**

சீர்மேவு கலாசர்களே தீவிரமாய் வாரும்-
செப்பு சுக்கானி விரைவாய் சுக்கான் சேரும்
கார்மேவும் நங்கூரம் ஆவலுடன் தூக்கி
கூந்து பாய்களை விரைவாய் விரி கலாசமாரே

II

கருங்கடலிதோ பார். கலாசர்களே அப்பால்
காணுதடா செங்கடலும் – பேண முறவேதான்
கொண்டலடிபோல் வருகுதடா அலையும்
குறிப்பாக சுக்கானி பார்த்ததனை ஓடு

III

வாடையது சீறி வருகுதடா மீறி
மருவு சில பாயைக் குறைத்திடவே பாரு
மேவு புகழ் கும்பாஸ் ஆனதையே தாரும்
விழுது விட்டு ஆழம் ஆனதைக் கூறும்

(அந்தோனி அண்ணாவியாரின் ராஜகுமாரி நாடகத்திலிருந்து)

# மக்கள் கலைஞர் அந்தோனி அண்ணாவியார்

அருட்தந்தை - கிருபானந்தன்
பங்குத்தந்தை, ஊர்காவற்றுறை.

மூப்பர், சங்கிரித்தான், அண்ணாவியார் என்று அழைக்கப் படும் பணி முறைகள் தமிழ் கத்தோலிக்க பங்குத் தளங்களில் உருவாகி கூர்ப்படைந்து பொதுநிலைப் பணி முறைகளாகும். மூப் பர் கிறிஸ்தவ சமூகத் தலைமையையும், சங்கிரித்தான் வழிபாட் டுச் சார்த் தலைமையையும் பிரதிபலிக்கின்ற வேளையில் அண்ணா வியார் பண்பாட்டுத் தலைமையின் பிரதிநிதியாகவும் காணப் படுகின்றார். இந்த முத்தள பணித்தலைமை தமிழ் கத்தோலிக்க விசுவாச பாரம்பரியத்தில் முளை விட்டு கிழந்தெழுந்த தனித்து வமான பணி அமைப்புக்களாகும். கத்தோலிக்க விசுவாசம் போத் துக்கேயர் ஆட்சியில் விதைக்கப்பட்டு டச்சு ஆட்சியில் கல்வினி யக் கலாபனையால் புடமிடப்பட்டு தனது அந்நியத் தன்மைகளை களைந்து மண்ணுக்குரிய பண்புகளோடு பண்பாட்டு மயமாகிய தன்மை ஆய்வுக்குரிய ஒன்றாகும்.

டச்சு ஆட்சியின் தொடர்ச்சியான அடக்கு முறைச் சட்டங் களினாலும் கல்வினிய சீர்திருத்த வாதிகளின் திட்டமிடப்பட்ட மத மாற்ற நடவடிக்கைகளினாலும் கத்தோலிக்க மக்களின் விசு வாச வாழ்வு பல சவால்களை எதிர்நோக்கியது. சலுகை களுக்காக மதம் மாறியவர்களும் சமூகப் பொருளாதார நோக் கோடு கத்தோலிக்கத்தைத் தழுவிக் கொண்டவர்களும் கலாப னைச் சாற்றில் பதர்களாக அறியப் படவும் குருக்களின் தலை மைத்துவத்தை இழந்த நிலையில் கத்தோலிக்க சமூகம் தனித்து வமான பொது நிலைத் தலைமைத்துவத்தை இழந்த நிலையில் பேணி உண்மை விசுவாசிகளின் கூட்டமாக மாறுகிறது. இந்த வரலாற்றுப் பின்னணியில் தான் விசுவாச பண்பாட்டின் வெளிப் பாடாக நாங்கள் எமது கத்தோலிக்கக் கூத்து, இலக்கிய பாரம் பரியத்தைக் காண வேண்டும்.

தமது வழிபாட்டுப் பின்னணியில், சூழலுக்கும் மனவாச னைக்கும் ஏற்ப இலக்கிய வடிவங்கள் உருவாக்கப்பட்டன. தபசு காலங்களில் பாடப்படும் புலம்பல்கள், ஒப்பாரிகள். கண்ணீர்க் கதறல்கள் கோவில் திருவிழாக் காலங்களில் பாடப்படும் திரை விருத்தம், தரு, தேவாரம், மங்களம் போன்றவற்றையும் தொழி லின் போது பாடப்பட்ட அம்பா. நாட்டுப் பாடல்கள் போன்

றவையும் கத்தோலிக்க இலக்கியப் பரப்பில் கூத்து மரபு, மறைக் கருத்துச் சொல்ல உள்வாங்கப்பட்ட சிறந்த வெகுஜன ஊடகமாகும்.

புனிதர்களின் வரலாறும் மனந்திரும்புபவர்களின் வரலாறும் கூத்துக்களின் உள் கருவாக அமைகிறது. விசுவாச உண்மைகளும் நற்செய்திக் கருத்துக்களும் இச்கூத்துக்களில் பரவியும் விரவியும் காணப்படும். இக்கூத்துக்கள் மறைக் கல்வி ஊட்டும் நோக்கத்தோடும் நற்செய்தி அறிவிக்கும் பின்னணியோடும் விசுவாச கருத்துக்களைப் பரவலாக்கும் தொண்டோடும் அமைவதைக் காணலாம். கோவை மறை பரப்பும் பணியாளரின் வருகையோடு இப்பண்பாட்டுப் பாரம்பரியஎழுச்சி உறுவதைக் காண்கிறோம். கோவைக் குருக்களின் மறைபரப்புப் பணி முதிர்ச்சியடைந்து ஆசியத்திருச்சபை முழு முயற்சி என்பதைக் கருத்திற் கொள்ள வேண்டும். ஆசாரத்துக்குரிய யாக்கோமே கொன்சலஸ் அடிகள் இப்பண்பாட்டு எழுச்சியின் பிரதிநிதியாக நாம் கருதுவது தவறாகாது.

ஆங்கிலக் கல்வியின் எழுச்சியால் கத்தோலிக்க சமூகங்கள் ஆங்கில மயமாக்கப்பட்டதாலும் எமது பண்பாட்டு அம்சங்களை முற்றாகப் புரிந்து கொள்ளாத ஐரோப்பியர் மறைபரப்பும் பணியாளர்களின் மனப்பான்மையாலும் கூத்து பரபுகளின் தனம் குறுகி ஒரு சில கிராமிய சமூகங்களில் மட்டும் பேணப்பட்டு வருவதை நாம் காணலாம். காலம் செல்லச் செல்ல மறைபரப்பு நோக்கோடு வந்த நாட்டுக் கூத்துக்களும மறைய சமூக சீர் திருத்தக் கருத்துக்கள் முன்னணிக்கு வந்தன. இத்தப் பின்னணியில் யாழ் குடாநாட்டின் தீவகப்பகுதிகளில் ஊர்காவற்றுறைத் தீவின் தென் திசையில் அமைத்துள்ள மெலிஞ்சி முனை கிராமம் தென் மோடி நாட்டுக்கூத்து மரபை தென்மோடிச் சிறப்புக் குன்றமல் புது அம்சங்களோடு தன்னகத்தே கொண்டிருக்கின்றது.

காலம் சென்ற அண்ணாவியார் அந்தோனி இக்கூத்து மரபின் ஒளிர்வுக்குத் தன்னை அர்ப்பணித்த தனிப் பெரும் கலைச் சுடர் உறுதியான விசுவாசமும் ஆழமான புலமையும் மக்களை நேசிக்கின்ற மனப்பான்மையும் கொண்ட அண்ணாவியார் அந்தோனியின் நாட்டுக்கூத்துக் கலைக்கான அர்ப்பணிப்புப் பணியின் 25 ஆண்டுகளுக்கு மேலான தியாகத்தை நாம் மறந்துவிட முடியாது கலைக் குருசில் அந்தோனி அண்ணாவியார் தீவகக் கலைஞர் பலரை தனது வாரிசாக விட்டுச் சென்றார் அவருடைய நாடகங்கள் சிறப்பாக மந்திரி குமாரன் சென்ற ஆண்டு எழுவைதீவுக் கலைஞர்களால் நடிக்கப்பட்டது அண்ணாவியார் அந்தோனி மக்களுக்காக வாழ்ந்த மக்கள் கலைஞர்.

# எழுவைதீவின் பாராட்டு

இ. சூசைப்பிள்ளை
*எழுவைதீவு.*

நாட்டுக்கூத்தின் பிதாமகன் என்னுமளவிற்குப் புகழ்பூத்திருந்த அமரர் அந்தோனி அண்ணவியார் 1942ம் ஆண்டு திருஞானதீபன் நாட்டுக்கூத்தையும், 1960ம் ஆண்டு தொம்மை அப்போஸ்தலர் நாட்டுக்கூத்தையும் பழக்கி அரங்கேற்றினர். அவருக்கு எம்மக்களால் புகழ்மாலை சூட்டப்பட்டது.

எனது உள்ளத்தில் இவரைப்பற்றி எழுந்த ஒரு பாட்டு திருஞானதீபன் நாடகத்தில் பிரபுக்குப் படித்தவர் பாடிய பாடலாகும்.

''அணிமேவிய திரைகடல் அலைஒளி
அடுக்கும் எழுவையாம் பதியில்
உறைந்திட்ட தவமேவிய
முனிவராம் தொம்மையின்
சரணபதமலர் சிரம் அணிந்துமே
சங்கைசெறி மகிபன் துங்கசமுகமதில்
சங்கையுடனே நானுஞ் சடுதிசெல்வனே''

''சங்கீதம் சூளும் நாவாந்துறை
தலத்தில்வாழ் சிந்துகுலத்து இலக்கிய
பைந்தரன் அந்தோனி அண்ணவிபாடு
செந்தமிழ் நாடகம் அதை
பாடி மகிழ்ச்சியுடன் – நாடி
சபைக்குத் துதி சாற்றிடுவேனே''

# சிந்தனைக்கு சில வார்த்தைகள்...

அந்தோனி அண்ணாவியாரின் நினைவுமலரைத் தயாரித்து ஒழுங்குபடுத்தி அச்சேற்றும் பொறுப்பை அவருடைய பேரன் நாவாந்துறை மிக்கேல்தாஸ் என்னிடம் தந்தார். நானும் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டேன்.

அவர் என்னைச் சந்திப்பதற்கு முதல் நாள் மாலையில் தான் நாடகம் ஆர்வலர்களான இளைஞர்கள் சிலரும் நானும் வட்டுக் கோட்டை முத்தலடியில் பன்னிரெண்டு வயதிற்குக் குறைந்த சிறுவர்கள் நடித்த ''தருமபுத்திரன்'' நாடகத்தின் சில காட்சிகளைப் பார்த்தோம்.

நாட்டுக் கூத்தையும் அதன் தனித்துவங்களையும் அழியாமல் பாதுகாப்பதற்கும் நாட்டுக் கூத்துக்கும் நாட்டுக் கூத்துக் கலைஞர்களுக்கும், உரிய இடத்தை சமூகத்தில் ஏற்படுத்துவதற்கும் நாம் என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த போது, நாவாந்துறையில் பிறந்து, கரம்பொனில் வாழ்ந்து, இலங்கையில் நாட்டுக்கூத்தை வளர்க்கத் தன் வாழ்வை அர்ப்பணித்த ஒருவரின் நினைவுமலரை வெளியிடத் துணைபுரியுமாறு கேட்கப்பட்டதை ஒட்டி எனக்கு இயற்கையாகவே இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்பட்டது.

நாட்டுக் கூத்து என்ற கலை மெல்ல அழிந்துவருகின்றது என்று கவலைப்படுவோர் பலர் இருக்கின்றார்கள். நாட்டுக் கூத்து, சாகா நாடகம், மேடை நாடகம், இவற்றுக்கிடையிலான வித்தியாசங்களைத் தெரிந்து கொள்ளாத அளவிற்கு நாட்டுக் கூத்து நவீனப்படுத்தப்பட்டுள்ளது

சில காலத்துக்கு முன் அரசாங்கம் அளித்த சலுகைகளைப் பயன்படுத்த நாட்டுக் கூத்தைத் தேடி ஓடியவர்கள் இன்று எதுவும் செய்யாமல் இருக்கின்றார்கள். அப்பொழுது ஒரு 'பாஷனாக' நாட்டுக் கூத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தவர்கள் கூட அந்தப் பேச்சை எடுத்தாலே இப்பொழுது மௌனமாக இருப்பது ஏனோ?

இதற்கிடையில் நாட்டுக் கூத்து அண்ணாவிமாரும் ஆசிரியர்களும் வயதேறி வாழ்வின் தழும்புகள் பட்டு மறைந்து கொண்டிருக்கிறார்கள்; அவர்களிடம் நாட்டுக் கூத்தைப் பயிலும் வாய்ப்புகளைப் பெற்ற இளைஞர்கள் பலர் தொழில் தேடியும் வேறு

காரணங்களாலும் நாட்டின் பல்வேறு பாகங்களுக்கும் பிற நாடுகளுக்கும் சென்றுள்ளார்கள்; நாட்டுக் கூத்து நாடக எழுத்துப் பிரதிகள், பல இடங்களில் உருக்குலைந்து அழிந்துபோயுள்ளன; பிரதிகள் பாதுகாப்பாக இருக்கு। சில இடங்களில் கூட அவற்றிற்கு எதிர்காலத்தில் என்ன நடைபெறும் என்ற பெரும் அச்சம் ஏற்படுகிறது.

நாட்டுக் கூத்தை அழியவிடக் கூடாது என்பதில் இரண்டு கருத்து இருக்க முடியாது, ஆனால் அதனைப் பாதுகாக்கத் தற்பொழுதைய காலத்தில் எவரும் முன்வராதிருப்பதும் நடைமுறைரீதியான நடவடிக்கை எடுக்காமல் இருப்பதும் தான் கவலைக்குரிய விடயமாகும்.

நாட்டுக் கூத்து என்பது பொது மக்களின், எமது நாட்டின் கிராமிய மக்களின் வாழ்வுடன் நெருங்கிய தொடர்புடையதோர் கலையாகும். ஏழை மக்களின் கலை விருந்துதான் நாட்டுக் கூத்து என்று நாம் துணிந்து கூற முடியும்.

ஆகவே பொதுமக்களின் நாட்டுக் கூத்தைப் பொதுமக்கள் தான் பாதுகாக்க வேண்டும். ஒரு புதுமையாக நாட்டுக் கூத்தை நோக்கி ரசிக்கும் புத்திஜிவிகளினதும் உயர்தட்டு மக்களினதும் ஆதரவு அதற்கு அவசியம் என்றபோதும் நாட்டுக் கூத்தை வாழ வைப்பவர்கள் அதன் ஊற்றுமூலமான பொதுமக்களே ஆவர்.

ஒரு இரவு முழுவதும் கூட நடைபெறும் நாட்டுக் கூத்தை அலுப்புச்சலிப்பின்றி ரசிக்கும் பொதுமக்கள் இன்றும் எமது கிராமங்களில் வாழ்கின்றார்கள். காலத்தின் தேவையினால் பதினொரு மணி நேர நாட்டுக் கூத்துக்களை இரண்டு மூன்று மணிநேர நிகழ்ச்சிகளாகச் சுருக்கினாலும் கூட அவை சலிப்புத் தருகின்றன என்று கூறுவோருக்காக நாட்டுக் கூத்துகள் தோன்றவில்லை என்பதை நாம் மனதில் கொண்டிருக்க வேண்டும்.

'நவீனப்படுத்துவது' 'தழுவுதல்' என்ற பெயர்களில் நாட்டுக் கூத்தை உருக்குலைத்தால் அந்தப் பெயரில் வேறு எதனையோ தான் நாம் வைத்திருப்போம்.

கரம்பொன் அந்தோனி அண்ணாவியாரின் நினைவுக் கொண்டாட்டமும் நினைவுமலர் வெளியீடும் நாட்டுக் கூத்தின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைக்க வேண்டும் என்பது எனது நம்பிக்கையுள்ள விருப்பமாகும்.

வீ. சின்னத்தம்பி
ஜூன் 1989

# இதயங்கனிந்த நன்றிகள்

கலைக்குரிசில் நீ. வ. அந்தோனி அண்ணாவியார் அவர்களின் இந்த நினைவுமலரை வெளியிடுவதில் பல்வேறு வழிகளில் உதவி புரிந்த அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தந்தைஆதரவும் ஊக்கமும் அளித்ததுடன் ஆசியுரை வழங்கிய பங்குத்தந்தை அருட்திரு றூபன் மரியாம்பிள்ளை அவர்களுக்கும்,

சிறப்புக்கட்டுரைகள் வழங்கிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் விரிவுரையாளர் மௌனகுரு ஆகியோருக்கும்,

மற்றும் கட்டுரைகள், கவிதைகள் எழுதிய அறிஞர்களுக்கும்,

இம்மலரை அச்சேற்றத் துணைபுரிந்த திரு. வி. சின்னத்தம்பி அவர்களுக்கும்,

விளம்பரம் தந்துதவிய வர்த்தகப் பெருமக்களுக்கும்

இம்மலரைக் குறுகிய காலத்தில் அழகுற அச்சிட்டுத்தந்த சித்திரா அச்சகத்தாருக்கும்,

எமது இதயங்கலந்த நன்றிகள்!

கலைக்குரிசில் நாடகமன்றம்
மெலிஞ்சிமுனை



# மங்களம்


உத்தம தற்பரற்கு மங்களம்
ஆதி உலகில் உதித்தவற்கு மங்களம்
சுத்தன் இஸ்பிரித்துவுக்கு மங்களம்
ஆதி - தூய சம்மனசோர்க்கும் மங்களம்
கன்னி மரியாளுக்கு மங்களம்
ஆதி காவலன் சஞ்சூசை முனிவருக்கும் மங்களம்.
நல்ல மழை பொழிய மங்களம்
எங்கள் நாடு செழித்து ஓங்க மங்களம்
பஞ்சம் படையகல மங்களம்
எங்கள நாடு செழித்து ஓங்க மங்களம
நாவினிய வரத்தான் அந்தோனி
அவர் நாமமதை என்றும் போற்றி வந்தனம்

சவிரிமுத்து அண்ணாவியார்




முன்வரிசையில்: கி. அன்ரன், கி. சவிரிமுத்து, செ. செல்வராசா

மேலே இடமிருந்து வலம்: இ. நோ. இராசாநாயகம், கலைக்குரிசில் அவர்கள், அ. டேவிற், இ. பவளம், ச. சவக்கின், வயித்தியார், ம. காணிக்கை, வ. மரியநாயகம், லூ. சேவியர்,



முன்வரிசையில் இருப்பவர்: *மிருதங்க ஆசிரியர் கி. சவிரிமுத்து*

மேலே இடமிருந்து வலம்: *மனேச்சர் வயித்தியார் யா. சீரணி, கலைக்குரிசில் அவர்கள், அ. சவிரிமுத்து அண்ணாவியார், பே. செபமாலை, யா. செல்லன், ப. சைமன், கி. சேவியர், சூ. ராசு.*



அகிலமும் புகழ்ந்திடு சிலுவையின் ராசனே-
ஆதியில்லாதோனே
ஐயனே அரசருக்குப் பெரியோனும் தூய்யோனே
அரிய உன்நாமம் ஓங்க!
முப்பொருளானவா எப்போர்க்கும் எம்தேவா-
முழுமுதல் தேவ தேவா-
முன்னவா உன்நாடு எங்கேயென நானும்-
தேடி வருகுவேனே.

அந்தோனி அண்ணாவியார்

PDF 2020 arkiv

பதிப்பு: சித்திரா அச்சகம், 664, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்